பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

நிதித்துறையில்
உங்கள் நண்பன்
★ ஷப்ரா ★
தற்காலிக முகவரி:
உதயன் பணிமனை
292/2, நாவலர் வீதி,
(கைலாச பிள்ளையார் கோவிலடி)
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூபா 3-50

Your Friends
In Finance
★ SHABRA ★
Temporarily Shifted To:
Uthayan Office
292/2, Navalar Road,
Jaffna.

சுடர் 5: பிரமோதூத ஆனி 24 ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஃதா பிறை 14 (08 - 07 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 135

# கிழக்குத் தமிழரை முற்றாக அழிக்க அரசு தீவிர திட்டம்

## விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 8

விடுதலைப்புலிகளை அழிக்கின்றோம் என்ற பெயரில் கிழக்கிலிருந்து தமிழர்களை முற்றாக அழித்தொழிக்கும் நோக்குடன் திட்டமிட்டு செயற்பட்டு வருகிறது ஸ்ரீலங்கா அரசு.

விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருந்தது:

''ஆயுதம் ஏந்திய சிங்களக் காடையர்களால் தமிழ்மக்கள் கொல்லப்படுகின்றனர்'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஸ்ரீ லங்கா அரசு எல்லைப்புறப் பாதுகாப்பு என்று கூறிக்கொண்டு சிங்கள ஊர்காவல் படையினருக்கும், சிங்கள மக்களுக்கும் நவீன ஆயுதங்களைக் கொடுத்து வருகின்றது.

இந்த ஆயுதங்களுடன் சிங்கள ஊர்காவல் படையினரும் சிங்கள காடையர்களும் தமிழ் பேசும் மக்களை பல இடங்களில் கொலை செய்து வருகின்றனர். குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இந்தப் படுகொலைகள் தொடர்கின்றன.

தமிழீழத்தில் ஆறு லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் பேசும் மக்கள் அகதிகள் ஆகியுள்ளனர். இதுவரை இவர்களுக்கு எந்தவித மருத்துவ, நிவாரண வசதிகள் யாராலும் வழங்கப்படவில்லை.

தமிழீழத்திற்கு வரும் உணவுப் பொருள்கள், எரிபொருள் ஆகியவற்றையும் சிங்கள அரசு

[3 ஆம் பக்கம் பார்க்க]

## மூதூர் குண்டு வீச்சில் பொதுமக்கள் 30பேர் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 8

கடந்த வெள்ளியன்று மூதூர் 59 ஆம் கட்டை கிராமங்களின் மீது குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய தாக்குதலில் சுமார் 30 பொது மக்கள் கொல்லப்பட்டனர். நாற்பதிற்கும் அதிகமானோர் படுகாயமுற்றனர்.

கோவில்கள் பல வீடுகள், கடைகள் சேதமுற்றன.

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. [உ-9]

## சண்டை தொடர்கிறது

மூதூர் பகுதியில் நேற்று தொடர்ந்து கடும் சண்டை இடம் பெற்றதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

முன்னேற முயன்ற படையினரை தடுத்து நிறுத்தி விடுதலைப் புலிகள் தாக்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## வட- கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு விட்டது

### நேற்று உத்தியோகபூர்வ அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 8

வடக்கு- கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு விட்டது.

இச்சபைக்குப் புதிய தேர்தல்களை நடத்த தேர்தல் ஆணையாளர் உரிய நடவடிக்கை எடுப்பார்.

ஜனாதிபதி பிரேமதாஸா இது சம்பந்தமாக தேர்தல் ஆணையாளருக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்து இருக்கிறார்.

மார்ச்மாதம்முதலாம் திகதி வடக்கு- கிழக்கு மாகாண சபையைச் சேர்ந்த ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எப் உறுப்பினர்கள் சுதந்திரஈழப் பிரகடனம் ஒன்றைச் செய்தனர்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையை ஒரு தனி மாநிலமாக பிரகடனம் செய்யும்

(3-ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு கச்சேரி ஹெலி தாக்கி சேதமுற்றது

### ஊழியர் காயமடைந்து ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜூலை 8

முல்லைத்தீவு கச்சேரி மீது ஹெலிக்கொப்டர் நடத்திய தாக்குதலில் அதன் ஒரு பகுதி சேதமடைந்தது.

ஹெலி தாக்குதலினால் கச்சேரி கணக்காளர் பகுதியில் கடமையாற்றிய பிரதம லிகிதர் திரு. எஸ். பேரம்பலம் (வயது 50) இரண்டு தொடைகளிலும் காயமடைந்தார்.

கடந்த 29 ஆம் திகதி நடந்த இந்தச் சம்பவத்தில் அங்கு கடமையில் இருந்த ஏனைய ஊழியர்கள் மயிரிழையில் உயிர் தப்பியதாக முல்லைத்தீவு அரச அதிபர் திரு. கே. பொன்னம்பலம் உதயனுக்குத் தெரிவித்தார்.

காயமடைந்த திரு. பேரம்பலம் புதுக்குடியிருப்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மந்திகை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டதாகவும் அரச அதிபர் கூறினார். (ஓ-10)

## தமிழகம் சென்ற அகதிகள் ஸ்ரீலங்கா கடற்படையினரிடம்

கொழும்பு, ஜூலை 8

3 படகுகளில் தமிழ்நாடு சென்றுகொண்டிருந்த தமிழ் அகதிகளை இலங்கைக்கடற்படையினர் நடுக்கடலில் வழிமறித்து மீண்டும் திருப்பி அழைத்து வந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அப்படகுகளில் 89 பேர் இருந்தனர் என்றும், அவர்கள் அனைவரும் தம்பலகமம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரியவந்தது.

கடற்படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட அந்த 89 பேருக்கும் என்ன நடந்தது எங்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை. (ஒ-எ)

முச்சந்தி முரளி



ஓ, உது கட்டம் கட்டமாய் நடத்தி முடிக்கிற திட்டங்களிலை ஒண்டாய் இருக்கும் போலை......!

## கிளிநொச்சி பகுதியில் நேற்று பொம்மர்கள் குண்டு வீச்சு!

கிளிநொச்சி, ஜூலை 8

கிளிநொச்சிப் பகுதியில் நேற்றுக் காலை 6 மணியளவில் பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

கணேசபுரம், பரவிப்பாஞ்சான், கனகபுரம், திருநகர்ப் பகுதிகளை இலக்கு வைத்தே குண்டுகள் வீசப்பட்டன.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இராணுவத்தினர் முகாமை விட்டு வெளியேற முற்பட்டனர் என்றும்-

அதைத் தடுத்து நிறுத்தும் நோக்குடன் விடுதலைப் புலிகள் பலத்த தாக்குதலை நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இம்மோதலைத்தொடர்ந்து இராணுவத்தினர் மக்கள் வசிக்கும் பகுதிகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதலை நடத்தினர். அதிகாலை வரை ஹெலித் தாக்குதலும் நடைபெற்றது.

அதன் உச்சக் கட்டமாகவே நேற்றுக் காலை பொம்மர்கள் குண்டு வீச்சை நடத்தின

(4 ஆம் பக்கம் பார்க்க)

## டயர் போட்டு முஸ்லிம்களும் எரிக்கப்பட்டதாகத் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 8

கடந்த வியாழனன்று திருகோணமலை மாவட்டம் கந்தளாயில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களான 12 முஸ்லிம்களையும், 12 தமிழர்களையும், முஸ்லிம் ஊர்காவல் படையினரும், இராணுவத்தினரும் சேர்ந்து சுட்டுக் கொலை செய்த பின்னர் டயர் போட்டு எரித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

அங்கு வியாழனன்று விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்ததாகக் கூறு இளம் பெண் ஒருவரை இராணுவத்தினர் கைது செய்து தமது முகாமுக்குக் கொண்டு சென்றதாகவும் —

இதுவரை இவர்பற்றிய தகவல்களை அறிய முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

வெள்ளிக்கிழமையன்றுகிண்ணியாவில் ஆறு அப்பாவித் தமிழர்களை முஸ்லிம் ஊர்காவல் படையினரும் இராணுவத்தினரும் சேர்ந்து உயிருடன் டயர் போட்டு எரித்ததாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை —

ஆலங்கேணிப் பகுதியில் வெளியேறிய தமிழர்களின் வீடுகளில் இருந்த பொருள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். வாசிகளுக்கு எரிபொருள் விற்க அனுராதபுரத்தில் தடை

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த எவருக்கும் டீசல், பெற்றோல் ஆகிய எரிபொருள்களை விற்கக்கூடாது என்று அனுராதபுரத்தில் தடை விதிக்கப்பட்டிருக்கிறதாம்.

இதே வேளை-

பூநகரி- நாச்சிக்குடா -மதவாச்சி- ஊடாக இராணுவ முகாம்களைத் தவிர்த்து இரண்டுதடவைகள்கொழும்பு போய்வந்த தனியார் வர்த்தகர் ஒருவரின் லொறிகடந்த ஆறாம் திகதிக்குப் பின்னர் அவ்வாறுசெய்ய முடியவில்லை

இந்தப்பாதையில்மதவாச்சியடியில் புதிய இராணுவ முகாம் ஒன்று நிறுவப்பட்டுள்ளதாகவும், நேற்றுச் சென்ற வாகனத்தைக் கொழும்பு செல்லவிடாமல் இராணுவத்தினர் திருப்பி அனுப்பிவிட்ட

(4-ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் 27 முகாம்களில் 30 ஆயிரம் அகதிகள்

### அரசாங்க அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 8

முல்லைத்தீவு மாவட்டத்தில் 27 முகாம்களில் 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட அகதிகள் தங்கியுள்ளனர்.

இந்த அகதிகள் அனைவரும் திருகோணமலை, வவுனியா மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள் ஆவர்.

கொக்கிளாயில் இருந்து விசுவமடு வரை இந்த அகதி முகாம்கள் அமைந்துள்ளன. அனேகமான முகாம்கள் பாடசாலைக் கட்டடங்களிலேயே இயங்குகின்றன. அகதிகளில் பெரும்பாலானவர்கள் பெண்களும், குழந்தைகளுமாவர்.

இத்தகவலை முல்லைத்தீவு அரச அதிபர் திரு.கே.பொன்னம்பலம் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக திருகோணமலையில் இருந்து அகதிகள் வருவது குறைந்து விட்டதாகவும அவர் கூறினார். (ஒ-10-113)

## அகதியாக வந்த இளைஞர் முல்லைத்தீவில் சூட்டுக்குப் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 8

திருகோணமலையில் அகதியாக உயிர் தப்பி முல்லைத்தீவுக்கு வந்த இளைஞர் ஒருவர் அங்கு படையினரின் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

அகதியாக வந்த இரு இளைஞர்கள் சைக்கிளில் முல்லைத்தீவு நகரிலுள்ள இராணுவ முகாமுக்கு சமீபமாக வழி தவறிச் சென்றபோது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும்-

சூட்டுக்கு ஒரு இளைஞர் இலக்காகி, அவ்விடத்திலேயே உயிரிழந்தார் என்றும்-

மற்றைய இளைஞர் தெய்வாதீனமாக உயிர் தப்பி விட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10-9)

### சுப நேரம்

08-7-90

ஞாயிற்றுக்கிழமை ஆனி 24

சுபநேரம்!

08-58— 10-28

இராகுகாலம்

04-28—05-58

## தெஹிவளையில் 16 தமிழர் கைது

கொழும்பு, ஜூலை 8

தெஹிவளைப் பகுதியில் 16 தமிழர்கள் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் இருவர் சம்மாந்துறையைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## தமிழகம் செல்வதற்கு பேசாலையில் அகதிகள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

மன்னாரிலிருந்து தமிழகத்துக்கு அகதிகளாகச் செல்வோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை தமிழகம் செல்வதற்காகச் சுமார் 35,000 பேர் பேசாலையில் காத்திருந்ததாக அறிய வந்தது.

மன்னார் மீனவரும், தமிழக மீனவருமாகச் சேர்ந்து அகதிகளை இந்தியாவுக்கு ஏற்றிச் செல்வதாகவும் அகதி ஒருவருக்கு 500 ரூபா அறவிடுவதாகவும் தெரியவந்தது.

அடம்பன், சேதீஸ்வரம், மாந்தை ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகள் தமது விளைபொருள்களை விற்று விட்டு இடம் பெயர்வதில் தீவிரமாக இருப்பதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## முல்லைத்தீவில் ஷெல்லடி; கடைகள் பல சேதமுற்றன

யாழ்ப்பாணம், ஜூலை 8

முல்லைத்திவு முகாமில் இருந்து நேற்று மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி இடைவிடாது ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதனால் நகரிலிருந்த பல கடைகள் சேதமுற்றன. இரண்டு கடைகள் தீப்பற்றி எரிந்தன.

ஷெல் தாக்குதல்களினால் பொதுமக்கள் சிலர் காயமுற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## ஞாயிறும் கடைகள் திறக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை8

தற்போதைய இராணுவ நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு ஞாயிற்றுக்கிழமைகளிலும் கடைகளைத் திறந்திருப்பது என முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தவிடயம் தொடர்பாக சாய்ப்புச்சட்ட விதிகளைக் கைக்கொள்வதில்லை எனச் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அறியவருகிறது. (உ)

### செய்திச் சாரம்

#### இதுவரை 144 புலிகள் வீரமரணம்

கடந்த ஜூன் 10 ஆம் திகதி ஸ்ரீலங்கா அரசுடன் ஆரம்பமான போரில் இதுவரை 144 விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

வீரமரணமடைந்த போராளிகளுக்கு வீர அஞ்சலி செலுத்தி விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இவ்விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-9)

#### மட்டக்களப்பில் மக்கள் கைது

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மட்டக்களப்பின் பல பகுதிகளிலும் பொது மக்கள் பலர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

வீதி யோரத்தில் ஐந்து சடலங்கள் எரிந்து கொண்டிருந்ததை அடுத்தே படையினர் பலரைக் கைது செய்து தடுத்து வைத்ததாகச் சொல்லப்படுகிறது. (அ-9)

#### வீரமரணம்

கடந்த புதன்கிழமை நண்பகல் 1:30 மணியளவில் வல்வெட்டித்துறை கடற்பகுதியில் கடற்படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடந்த மோதலில் லெப்டினன்ட் ஜிம்ரோ என்ற போராளி வீரமரணமடைந்தார். (உ-9)

#### வவுனியா வரை ரயில் ஓடும்?

யாழ்ப்பாணம், ஜூலை 8

வவுனியா வரை யாழ். தேவி ரயிலை ஓடுவது குறித்தும், அதில் உணவுப் பொருள்களைக் கொண்டு வருவது குறித்தும் நேற்று வவுனியாவில் இராணுவ அதிகாரி நடத்திய மாநாடு ஒன்றில் ஆராயப்பட்டதாம்.

இந்த மாநாட்டுக்கு வவுனியா பிரசைகள் குழுப் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டிருந்ததாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ)

#### அதிகாரிகள் குழு இன்று வவுனியாவுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 8

வவுனியாவில் மீண்டும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தும்பொருட்டு அதிகாரிகள் குழு ஒன்று இன்று காலை யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா அரசாங்க அதிபர் தலைமையில் அங்கு புறப்படுகிறது.

இக்குழு நாளை புறப்படுவதாக முன்னர் தீர்மானிக்கப்பட்டு இருந்தது. எனினும் ஒருநாள் முந்திச்செல்வதற்கு நேற்று முடிவு செய்யப்பட்டது. (ஒ-10)

#### உற்பத்திக்குழுக்கள் அமைக்க முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 8

அத்தியாவசிய தேவைகள், உற்பத்தி, விநியோகம் ஆகியவற்றை மேற்கொள்வதற்கு கிராமிய உற்பத்திக் குழுக்களை அமைப்பது தொடர்பாக தமிழீழ ஆய்வு நிறுவனம் (ரூட்) யாழ். சனசமூக

[4 ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்ட அகதிகளுக்கு நிவாரணம் இல்லை

கிளிநொச்சி, ஜூலை 8
கிளிநொச்சி மாவட்டத்தில் இடம் பெயர்ந்து அகதிகளாக உள்ள மக்களுக்கு இதுவரை எந்த வித நிவாரண உதவியும் வழங்கப்பட வில்லை.

இதனால் அகதியாக உள்ளவர்கள் உணவுக்காக மிகவும் கஷ்டப் படுகின்றனர்.

அன்றாட கூலிவேலை செய்து சீவித்து வந்த மக்கள் பலர் தற்போது வேலை இன்றி இருக்கிறார்கள்.

இடம் பெயர்ந்து சென்றுள்ள இடங்களில் இவர்கள் பட்டினியை எதிர் நோக்கி உள்ளனர் என்று தெரிவிக்கப் படுகிறது. (இ-76)

## முஸ்லிம் அகதிகள்

கொழும்பு, ஜூலை 8
கந்தளாயில் சுமார் 40 ஆயிரம் முஸ்லிம் அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## மண்முனையில் ஹெலித்தாக்கு;
## பத்துப்பேர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 8
மட்டக்களப்பு மாவட்டம் மண்முனைத் துறையில் வெள்ளியன்று ஹெலியிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலில் பத்துக்கும் அதிகமான பொதுமக்கள் படுகாயமுற்றனர்.

ஆரையம்பதியைச் சேர்ந்த சந்திரகுமார், கஜேந்திரலிங்கம், சிவகுமார், சிவசம்பு, உதயகுமார், குகதாஸ். செல்வராஜா ஆகியோரும்—

தாளங்குடாவைச் சேர்ந்த கனகரத்தினம், மகலிங்கம், ரவிச்சந்திரன் ஆகியோரும்—

மண்முனையைச் சேர்ந்த சணபதிப்பிள்ளை என்பவரும் இந்தச் சம்பவத்தில் படுகாயமுற்றதாக தெரிவிக்கப்பட்டது. (உ 9)

## மக்கள் வங்கி ஊழியருக்கு அழைப்பு

காங்கேசன்துறை மக்கள் வங்கிக் கிளையில் கடமை ஆற்றிய ஊழியர்களை நாளை திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளைக்கு சமுகம் கொடுக்குமாறு மக்கள் வங்கி பிரதேச முகாமையாளர் திரு. ஆர். அருளானந்தம் கேட்டுள்ளார்.

காங்கேசன்துறையில் இடம் பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வங்கி கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக மூடப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## சின்னஞ் சிறு விளம்பரம்

### புறொயிலர் விற்பனைக்கு

அரியாலைச் சந்திக்கு அருகாமையிலும் பைஸ்ரியான் சந்திக்கு முன்பாகவும் புறொயிலர் விற்பனைக்கு உண்டு. விலை 55/- தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள் 1) தெய்வேந்திரம் 684, கண்டி வீதி, அரியாலை. 2. X. R. பிறான்சிஸ் (பைஸ்ரியான் சந்திக்கு முன்பாக) [13582]

### தாதி தேவை

நேரில் தொடர்பு கொள்ளவும், Dr. P சொர்ணலிங்கம், மாவடி மூளாய் றோட், வட்டுக்கோட்டை. தொடர்பு நேரம்: காலை 7 மணியில் இருந்து 11 மணிவரை மாலை 3 மணியில் இருந்து 6 மணி வரை. (13580)

## புதிய அதிபர்கள்

நிரந்தர அதிபர்கள் இல்லாத சுமார் 5 ஆயிரம் பாடசாலைகளுக்கு அடுத்த இரண்டு வாரங்களில் புதிய அதிபர்கள் நியமிக்கப்படுவர்.

இவ் வெற்றிடங்களை நிரப்புவதில் இனியும் தாமதம் காட்டப்படமாட்டாது என்று கல்விச் சேவைகள் ஆணைக்குழுத்தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்தார்.

அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் உத்தரவின்மீது இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. (இ-எ)

மட்டக்களப்பிலிருந்து யாழ்.வரும் வழியில்

# கைதான பல்கலை. மாணவர்களை பாதுகாப்பாக ஒப்படையுங்கள்

## யாழ்.பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 8
மட்டக்களப்பிலிருந்து கடந்த 14 ஆம் திகதி யாழ்ப்பாணம்நோக்கிவந்துகொண்டிருந்தசுமார் 50பல்கலைக்கழக மாணவர்கள் ஸ்ரீலங்கா படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என நாம் அறிகிறோம். இவர்களுக்கு என்ன நேர்ந்துள்ளதுஎன்பதுகுறித்து நாம் கவலை கொண்டுள்ளோம்.

பாதுகாப்பாக இவர்கள் எம்மிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனக் கோருகிறோம்.

— இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. இது தொடர்பாக மறுமலர்ச்சிக் கழகம் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

ஸ்ரீலங்கா அரசு இன்றுதமிழ் பேசும் மக்கள் மீது முழு அளவிலான யுத்தம் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கிறது. வடக்கு, கிழக்கு பகுதி முழுவதும் இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் பேசும் மக்கள் சிங்களப்படைகளினாலும், சிங்களக்காடையர்களினாலும் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

★ கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் பெரும் எண்ணிக்கையான தமிழ் பேசும் மக்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள். எஞ்சியவர்கள் அகதிகளாக அடித்து விரட்டப்படுகிறார்கள்.

★ தமிழ் பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப் படுகின்றனர்.

★ தமிழீழப்பகுதி முழுவதும் மக்கள் வாழும் பகுதிகள் மீதும் பாடசாலைகள், ஆலயங்கள் ஆகியவை மீதும விமானக் குண்டு வீச்சுகளும், கடற்படைக் கப்பல்களிலிருந்து பீரங்கித் தாக்குதல்களும், இராணுவ முகாம்களிலிருந்து ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

★ வடக்கு- கிழக்கு பகுதி மீது பொருளாதாரத்தடையைத் விதித்து அதன் மூலம் தமிழ் பேசும் மக்கள் பட்டினிச் சாவை எதிர் நோக்குமாறு அரசு திட்டமிட்டு நிர்ப்பந்தித்திருக்கிறது.

இவைகளெல்லாம் ஸ்ரீலங்கா அரசினால் திட்டமிட்டுநடத்தப்படும் தமிழின அழிப்பு நடவடிக்கையே. ஸ்ரீலங்கா அரசின் இத்தகைய இன வெறிச் செயல்களை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஸ்ரீலங்கா அரசினால் திட்டமிட்டு தடுக்கப்பட்ட- தமிழ் மக்களுக்கான- உணவு, மருந்து எரிபொருள் போன்ற அத்தியாவசிய பொருள்களை நேரடியாகவே கொண்டு வந்து வடக்கு- கிழக்கில் விநியோகிக்குமாறு உதவி வழங்கும் சர்வதேச நிறுவனங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் பேசம் மக்கள் மீது ஸ்ரீலங்கா அரசு கட்டவிழ்த்து விட்டிருக்கும் காட்டு மிராண்டித்தனமான அடக்கு முறைகளை நிறுத்துமாறு ஸ்ரீலங்கா அரசுக்கு சர்வதேச சமூகம் நெருக்கடி கொடுக்க வேண்டும்.

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## கடற் பகுதியில் இருந்து தாக்குதல்

வல்வெட்டித்துறை ஜூலை 8
கடந்த சனிக்கிழமை பருத்தித்துறைக் கடற் பிரதேசத்திலிருந்து மேற் கொள்ளப்பட்ட பீரங்கி, ஷெல் தாக்குதல்களின் போது பருத்தித்துறை நகரின் பல பகுதிகளிலும் குண்டுகள் விழுந்தன.

இச்சம்பவத்தில் கடற்கரையில் நின்ற முனைப் பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளி ஒருவருக்கு காலில் காயம் ஏற்பட்டது.

தும்பளை மணல் வீதியில் உள்ள ஒரு வீட்டில் ஷெல் வீழ்ந்து வெடித்ததில் வீட்டிலிருந்தவர் காயமடைந்தார். (இ-160)

## பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில்

சாவகச்சேரி, ஜூலை8
சாவகச்சேரிப் பகுதியில் சுமார் 30 பாடசாலைகள் செயல்படவில்லை என தெரிய வருகிறது.

சாவகச்சேரி நகரக்கல்லூரிகளான டிறிபேக், இந்து, மகளிர் கல்லூரி ஆகியவையும் மூடப்பட்டுள்ளன. (இ-31)

திருமலை அரச ஊழியரை

# வேலைக்குத் திரும்பக் கோரி விமானமூலம் துண்டுப் பிரசுரம்

யாழ்ப்பாணம், ஜூலை 8
திருகோணமலையில் உள்ள அரச ஊழியர்களை உடனடியாக வேலைக்குத் திரும்புமாறு விமானம்மூலம் துண்டுப் பிரசுரம் வீசப்பட்டது.

திருகோணமலை நகரில் இருந்து அரச ஊழியர்கள் அகதிகளாக வெளியேறி நிலாவெளி, கும்புறுப்பிட்டி போன்ற இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

இவர்களை வேலைக்கு திரும்புமாறு கோரி கடந்த 25 ஆம் திகதி விமானம் மூலம் துண்டுப் பிரசுரங்கள் திருமலை நகரிலும் அதை அண்டிய கிராமங்களிலும் வீசப்பட்டன.

சிறு எண்ணிக்கையானோரே தற்போது வேலைக்குச் செல்கின்றனர் என்றும் பெரும்பாலனோர் யாழ்ப்பாணம் நோக்கி வந்துள்ளனர் எனவும் அரச ஊழியர் ஒருவர் தெரிவித்தார். (இ-3)

## மட்டக்களப்பில் பதற்றம்

கொழும்பு, ஜூலை 8
மட்டக்களப்புப் பகுதிகளில் கடந்த புதன் கிழமை பதற்ற நிலை காணப்பட்டது.

செவ்வாய் இரவும் புதன் காலையும் ஊறணிப்பகுதியில் வேட்டுச்சத்தங்கள் பரவலாகக் கேட்டதே இந்த பதற்றத்திற்கு காரணம். (இ-எ)

## பால் விநியோகம்

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், இம் மாதம் முதலாம் திகதி உதயனில் வெளியிட்ட பால் விநியோகம் சம்பந்தமான அறிவித்தலில்—

பொதுமக்கள் எம்மிடம் கூடுதலான பாலை வாங்கும் இடத்து என்பதற்குப் பதிலாக, வழங்கும் இடத்து என்று அச்சுத் தவறுதல் ஏற்பட்டுவிட்டது, அதனைத் திருத்தி வாசித்துக்கொள்ளவும்.

## தமிழ் சுருக்கெழுத்து - தட்டெழுத்தாளர்

தமிழில் நிறைந்த தேர்ச்சியும், தமிழ் சுருக்கெழுத்து - தட்டெழுத்துத் துறையில் போதிய அனுபவம், வேகமும் உள்ள ஒருவர் தேவை. விண்ணப்பதாரர் ஆணாகவும், யாழ். நகரில் வசிப்பவராகவும் இருப்பது விரும்பத்தக்கது.

இப்பதவிக்குத் தெரிந்தெடுக்கப்படுபவர் பகுதி நேரக் கடமை புரியத் தயாராக இருத்தல் வேண்டும்.

அத்தாட்சிப் பத்திரங்கள், நற்சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

ஆளணி முகாமையாளர்,
உதயன் பணிமனை,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## ENGLISH STENOGRAPHER

We are looking for a qualified English Stenographer with experience of not less than 5 years at a reputed establishment.

Preference will be given to males who are living within the Jaffna Municipal Limits.

Call over personally with testimonials

Personnel Manager,
UTHAYAN,
Navalar Road, Jaffna.

## அறிவித்தல்

வரையறுக்கப்பட்ட
ஹட்டன் தேசிய வங்கி
54, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

மேற்படி எமது வங்கி மட்டுப்படுத்தப்பட்ட பணக் கொடுக்கல், வாங்கல்கள் மு.ப 9.00 மணி தொடக்கம் மு.ப 9.30 மணி வரை நடைபெறுகின்றது.

என்பதனையும் நிலைமைகளைப் பொறுத்து சேவை நேரம் மாற்றப்படும் என்பதனையும் வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

முகாமையாளர்.
(சி-4797)

## அதிர்ஷ்டலாபச் சீட்டு

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்பாள் ஆலய தொண்டர் சபையினால் 07-07 1990 அன்று அதிர்ஷ்டம்பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தற்போதைய சூழ்நிலை காரணமாக 17 - 11 - 1990 சனிக்கிழமை பின்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

இப்படிக்கு
அம்பாள் தொண்டர் சபையினர்.
(13589)

## ஸ்ரெபிலயிசர் தேவை

வோல்ட்டேஜ் ஸ்ரெபிலயிசர் [Voltage Stablizer] ஒன்று உடனடியாகத் தேவை அது Servo Motor Control System வகையைச் சேர்ந்ததாகவும் 2 KVAக்கு மேற்பட்ட சக்தியைக் கையாளக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

உடன் தொடர்பு கொள்ளுங்கள்:

உதயன் பணிமனை,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# ஆர்ஜென்ரீனா - மேற்கு ஜேர்மனி இறுதிப் போட்டியில் இன்று மோதல்

மிலான், ஜூலை 8
பதினான்காவது உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனாவுடன் மோதும் வாய்ப்பு மேற்கு ஜேர்மனிக்குக் கிடைத்திருக்கிறது

கடந்த புதன்கிழமை ரியூறினில் நடந்த இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் மேற்கு ஜேர்மன் அணி 5-4 கோல்களால் இங்கிலாந்து அணியைத் தோற்கடித்தது

இடை வேளைவரை இரு அணிகளும் ஒரு கோலும் போடவில்லை இடைவேளையின் பின்னர் இரண்டு அணிகளும் தலா ஒரு கோல் போட்டன, ஆட்ட முடிவு வரை எந்த அணியும் வெற்றிக்கான கோலைப் போடவில்லை.

அதனால் ஆட்ட நேரம் மேலும் நீடிக்கப்பட்டது. அப்போதும் நிலைமையில் மாற்றம் ஏற்படவில்லை. அதன் பின்னர் பெனால்டி உதைகள் மூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது.

இறுதிப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை ரோமில் உள்ள ஒலிம்பிக் விளையாட்டரங்கில் நடைபெறும்.

இதனிடையில் உலக கிண்ணப் போட்டியின் மூன்றாவது இடம் யாருக்கு என்பதைத் தீர்மானிக்கும் போட்டி நேற்று சனிக்கிழமை பாரி என்னுமிடத்தில் நடைபெற்றது

இந்த ஆட்டத்தில் இத்தாலியும் இங்கிலாந்தும் மோதின. (இ-எ)

## ரசிகர்கள் கலாட்டா

லண்டன், ஜூலை 7
உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து அணி தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து லண்டன் பிரைட்டன் நகரில் ஏற்பட்ட கலவரத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

உதைபந்தாட்ட ரசிகர்கள் ஆத்திரத்தில் குழப்பம் விளைவித்தபோது இந்த உயிரிழப்பு ஏற்பட்டது.

ரசிகர்கள் வீதியில் சென்ற கார்களை மறித்து தலைகீழாகப் புரட்டி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மேற்கு ஜேர்மனியில் தயாரிக்கப்பட்ட கார்கள் ரசிகர்களால் சேதமாக்கப்பட்டன (இ-எ)

# லைபீரிய படைத்தளபதி ஜூலு நாட்டிலிருந்து தப்பினார்

மொன்றோவியா, ஜூலை 7
லைபீரியாவின் அரசுப் படைத்தளபதி ஜெனரல் சார்ள்ஸ் ஜூலு நாட்டைவிட்டுத் தப்பிச் சென்று விட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

ஒரு சில தினங்களுக்கு முன்னர்தான் ஜெனரல் ஜூலு இராணுவத் தளபதியாக ஜனாதிபதி சாமுவல்டோவால் நியமிக்கப்பட்டிருந்தார்.

திரு டோவின் நம்பிக்கையாளராக இவர் இருந்தார் ஜனாதிபதியின் மாளிகையிலிருந்து எட்டு மைல் தூரத்தில் சார்ள்ஸ் ரெய்லர் தலைமையிலான கிளர்ச்சிப் படைகள் நிலை கொண்டுள்ளன.

ஜனாதிபதியின் பெருமபாலான நெருங்கிய சகாக்களும் நாட்டை விட்டுத் தப்பி ஓடி விட்டனர்.

தலைநகர் மொன்றோவியா கடந்த ஒரு வார காலமாக தண்ணீர், மற்றும் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்ட நிலையில் இருந்து வருகிறது.

தலைநகருக்கு வரும் பிரதான வீதிகள் அனைத்தும் கிளர்ச்சிப் படைகளால் பிடிக்கப்பட்டு உள்ளன. (இ-எ)


# ஈரான் - ஈராக் அமைச்சர்கள் நேரில் சந்தித்துப் பேசினர்

ஜெனிவா, ஜூலை 7
ஈரான், ஈராக் ஆகிய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் கடந்த புதன்கிழமை ஜெனிவாவில் நேரில் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.

இச் சந்திப்பை ... பொதுச்செயலாளர் பெரெஸ் டி குயிலர் ஒழுங்கு செய்திருந்தார்

வளைகுடா யுத்த நிறுத்தம் ஏற்பட்ட பின்னர் இரு நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களும் சந்தித்துப் ... மூன்றாம் ஆகும். (இ-எ)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மார்க்கண்டு நித்தியானந்தராஜா
(ராசன்)

தோற்றம்: 22 - 12 - 1965
அந்நியர் அழிப்பு: 19 - 07 - 1989
திதி: 08 - 07 - 1990

அன்பான எம் மகனே!
எம் துயர் துடைக்க யார் உண்டு என்று சென்றாயோ? புன் சிரிப்புடன் எங்களை வாழ வைத்தவனே! நீர் சென்ற இடம் எது கூறமாட்டாயோ? தாய், தந்தை மனம் அங்கலாய்க்க, உற்றார், உறவினர் பரிதவிக்க மனை மகள் கதற உன்னை அழித்தவரோ அந்நியர், மகனே, உன்னை இழந்து ஒரு வருடமாகியும் நீ எங்கள் முன் இருந்து பேசிச் சிரிக்கிறாய், எத்தனை வருடங்கள் ஆயினும் உம்மைக் கண்டிட எம் மனம் துடிக்குது மகனே!

கண்ணீர் பெருக்கி உம் ஆத்மா இந்நாளில் வேண்டுகின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, மனைவி, பிள்ளைகள்.
உற்றார், உறவினர், நண்பர்கள்.

முருகன் வீதி,
பாரதிபுலம்,
திருநெல்வேலி கிழக்கு. (13590)

## இடமாற்றம்

206,208, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த
சாமுவேல் சன்ஸ் அன்ட் கோம்பனி
இல. 17, செம்மணி வீதி,
முத்திரைச் சந்தை நல்லூருக்கு
மாற்றப்பட்டுள்ளது.

9 - 7 - 90 திங்கட்கிழமை தொடக்கம்
விற்பனை ஆரம்பிக்கப்படும்.

முகாமையாளர்,
சாமுவேல் சன்ஸ் அன்ட் கொம்பனி
யாழ்ப்பாணம்.
(சி-4794)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பாலகர் பசி திருங்கள்!

வடபகுதியில் உள்ள யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மூன்று மாவட்டங்களில் மட்டும் 85 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பச்சிளம் பாலகர்கள் பட்டினியால் வாடுகிறார்கள் என்பது உத்தேச மதிப்பீடு. கிளிநொச்சியையும், வவுனியாவையும் சேர்த்தால் வயிற்றுப் பசி போக்கமுடியாமல் துஞ்சும் இளசுகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

இவர்களில்-

தங்களுக்குப் பசியாக இருக்கிறது என்று வாய் விட்டுச்சொல்ல முடியாத, வீறிட்டு அழுவதற்கு மட்டுமே தெரிந்த ஒரு வயதுப் பாலகர்கள் கால் லட்சம் பேர் இருப்பர்!

இரண்டு மூன்று வயது வரையும் தமது குழந்தைகளுக்குத்தாய்ப்பால் ஊட்டி பிள்ளைகளைத் திடகாத்திரமாக வளர்த்த தமிழ் தாய்மார் பரம்பரை இப்போது இல்லை. தன் உந்தியில் வளர்ந்த, தனது இரத்தத்தில் உருவாகிய சொந்தச் சிசுவுக்கு ஆகக் கூடியது ஆறு மாதங்களுக்கு மேல் பாலூட்டும் தாய்மாரைத் தேடிக் கண்டுபிடித்துக் கணக்கெடுக்க வேண்டிய காலமாயிற்றே இது!

தாய்ப்பாலும், பின்னர் பசுப்பாலும் குடித்து வளர்ந்த சந்ததி முத்ததாகி விட்டது. பிறந்த நாள் தொடக்கம் ஐந்து ஆறு வயது வரை ''பிராண்ட்'' மாறி ''பிராண்ட்'' என்று ஏதோ ஒரு புட்டிப்பாலை- பால்மாவை - நம்பித்தான் இப்போதைய இளசுகளின் வயிறு வளர்கிறது.

இந்தக் கலியுக மாற்றத்தால் நாகரிக மோகத்தால், செயற்கை உணவு யுகம் என்று இக்காலத்தைக் கொள்ளவேண்டியதாயிற்று அதனால், பால்மா இல்லாவிட்டால் பாலகர்கள் பட்டினி என்ற நிலை சர்வசாதாரணமாகி விட்டது

பெரியவர்கள், வளர்ந்தவர்கள் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்பத் தமது பசியை அடக்கிக் கொள்ள முடியும். உண்டியைச் சுருக்குதல் இயலும். ஆனால் பச்சிளம் குழந்தைகளால் அது முடியுமா? வளரும் வயதில் சிறிசுகளைப் பட்டினி போட முடியுமா? குருத்துப் பருவத்திலே தண்ணீர் ஊற்றாவிடில் வாடிப் போகும் இளம் பயிர்களைப் போல அவர்கள் வதங்கிப் போவார்களே!

பெரியவர்களின் உணவுக்குத் தடை போடுவதை விட, அப்பாவிப் பொது மக்களின் வயிற்றைப் பட்டினிபோடுவதைவிட பச்சிளம் பாலகரின் பசியைத் தீர்க்கக் குந்தகம் விளைவிப்பது வெறும் மனிதாபிமானம் அற்ற செயல்மட்டுமல்ல; பெரும் பாவமும் ஆகும்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களைத் தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பி வைப்பதாகக் கடந்த பல நாட்களாக அரசாங்கம் பீற்றி வருகிறதே அன்றி, ஒரு தானிய மணியாவது யுத்தம் தொடங்கிய பின் இங்கு வந்து சேரவில்லை. அப்படியிருக்க —

குழந்தைகளின் உயிரைப் பிடித்து வைக்க வல்லனவாக விளங்கும் பால் மா வகைகள் எப்படி வர முடியும்?

குழந்தைகள் நலன், சிறுவர் உரிமை என்பன ஐ.நா. சாசனத்தில் இடம்பெற்றுள்ளவை. அவற்றில் எல்லாம் பெரும் கனவான் தனமாகக் கையொப்பமிட்ட இலங்கை அரசு, குழந்தைகள் உணவைக் கூட அனுப்பாமல் தமிழ் பாலகர்களைப் பட்டினி போட்டிருப்பது படுபாதகமான செயலாகும்.

''கெயர் இன்ரநாஷனல்'' குழந்தைகள் பாதுகாப்பு நிதியம் போன்ற தொண்டர் நிறுவனங்களும், யுனிசெப் போன்ற குழந்தைகள் நலனில் நாட்டம் கொண்ட அமைப்புக்களும் இந்த வேளையில் வருங்காலத் தமிழ்ப் பிரஜைகளான இன்றைய தமிழ்ப் பாலகர்களைக் காப்பற்ற உதவ வேண்டும். தாம் வழங்கும் உதவிகளை நேரடியாகக் கொடுத்து பாலகர் பசி தீர்க்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

# யாழ். மின்சாரசபை ஊழியர்கள் மன்னார் செல்ல முடியாத நிலை

## திருத்த வேலைகள் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்ப்பாணத்தில் இருந்து மின்சாரசபை ஊழியர்கள் திருத்த வேலைகளுக்காக மன்னார் செல்ல முடியாத நிலைமை நீடித்து வருகிறது.

மன்னாருக்கான மின்சாரம் வழங்குவதற்கான திருத்த வேலைகளை மேற்கொள்ள யாழ்ப்பாணத்தில் இருந்து பொறியியளாளர்கள், பொருள்களுடன் செல்ல உள்ள சிக்கலை யாழ் - மின்சார சபை அதிகாரிகள் கொழும்புக்கு தெரியப்படுத்தி இருந்தனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவியுடன் மன்னாருக்குப் போய் திருத்த வேலைகளை மேற்கொள்ளுமாறு யாழ். மின்சாரசபைக்கு கொழும்பு அலுவலகம் ஆலோசனை வழங்கி இருந்தது.

ஆனால் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பாதுகாப்பு வழங்க முடியாது எனக் கைவிரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனாலேயே இவற்றைத் திருத்தி மன்னாருக்கு மீண்டும் மின்சாரம் வழங்க முடியாத நிலைமை இருந்து வருகிறது. (இ-3)

# மட்டக்களப்புக்கு போதுமான நிவாரணப் பொருள் இல்லை

கொழும்பு ஜூலை 8

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு அனுப்பப்பட்டுள்ள நிவாரணப் பொருள்கள் போதாது என்று புகார் செய்யப்பட்டிருக்கிறது.

இதுவரை 18 லொறிகளில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு நிவாரணப் பொருள்கள் அனுப்பப்பட்டன இவை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அரச ஊழியர் உட்பட அனைவருக்கும நிவாரணம் வழங்கப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இப்போது நிவாரணப் பொருள்கள் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

26 தினங்களாக வீடுகளிலும் முகாம்களிலும் முடங்கிக் கிடக்கும் மக்களுக்கு நிவாரணம் போக்துமானதாக இல்லை என்று கூறப்பட்டுள்ளது. (இ - எ)

## அம்பாறைக் காடுகளில் 10 ஆயிரம் படையினர்

கொழும்பு ஜூலை 8

அம்பாறைக் காடுகளில் சுமார் பத்தாயிரம் ஆயுத படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

பக்மாட்டியாவ, கஞ்சிகுடிச்சஆறு, ஊறணி, கோமாரி ஆகிய பகுதிகளில் விமானப் படையினர் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்

இத்தேடுதலில் 6 ஆயிரம் இராணுவத்தினரும் 4 ஆயிரம் விசேஷ அதிரடிப்படையினரும் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களின் நடவடிக்கைகளுக்கு புதைத்து வைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள், பொறி வெடிகள் ஆகியவை தடைகளாக உள்ளன என்றும் இதனால் தேடுதல் நடவடிக்கையில் பின்னடைவு ஏற்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## மாற்றுடை இல்லாமல் முல்லைத்தீவு அகதிகள்!

யாழ்ப்பாணம், ஜூலை 8

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 40 முகாம்களில் தஞ்சமடைந்துள்ள ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட திருகோணமலை அகதிக் குடும்பங்களுக்கு உடுபுடைவை, பால்மா ஆகியவற்றை உடனே அனுப்பும்படி அங்கிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அணிவதற்கு மாற்றுடை இன்றி, குழந்தைகளுக்கு பால்மா இன்றி இன்னலுறும் இந்தக் குடும்பங்களுக்கு அவசர உதவியாக இரு பொருள்களையும் அனுப்புமாறு முல்லைத்தீவு றெட்பானாக்கிளை விடுத்துள்ளது.

முல்லைத்தீவு றெட்பானாவின் நிவாரண மற்றும் புனர்வாழ்வு உத்தியோகத்தர் திரு. கோ. புவனேந்திரன் இந்த அவசர கோரிக்கையை கொழும்பில் உள்ள தமது தலைமை அலுவலகத்துக்கு விடுத்துள்ளளார். (அ-3)

## சபை மீண்டும் 17 இல் கூடும்

நாடாளுமன்றம் மீண்டும் எதிர் வரும் 17 ஆம் திகதி கூடும் (ஒ-எ)

செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள்

## மட்டக்களப்பில் சிறிது காலம் தங்கியிருப்பர்

கொழும்பு, ஜூலை 8

மட்டக்களப்புக்குச் சென்றுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் அங்கு தொடர்ந்து சில காலம் தங்கியிருந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ வேண்டும் என்று மட்டக்களப்பு அரச அதிபர் திரு. யோகநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போது மட்டக்களப்புப் பகுதியில் பிரெஞ்சு டாக்டர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விடுதிகளில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் தங்கி உள்ளனர்.

அரச அதிபரின் வேண்டுகோளை ஏற்று மட்டக்களப்புப் பகுதியில் சில காலம் தங்கி இருக்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் தீர்மானித்துள்ளனர் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ-எ)

## தீப்பெட்டி தட்டுப்பாடு

கொடிகாமம் ஜூலை 8

கொடிகாமம் கடைகள், கொடிகாமம் தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்க கடைகள் ஆகியவற்றில் அத்தியாவசிய பொருளான தீப்பெட்டிக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. (இ-75)

## சபையில் கேட்டவை

கொழும்பு ஜூலை 8

மாகாண சபைச் சட்டத் திருத்தங்கள் சம்பந்தமான நாடாளுமன்ற விவாதத்தில் இடம் பெற்ற பேச்சுக்கள்:

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா :- இந்தியப் படையினர் இங்கு முழு மூச்சாக விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை அடக்கப் போரிடவில்லை.

அமைச்சர் சாகுல் ஹமீது: நாம் யுத்தத்திற்குப் போகவில்லை. நாம் யுத்தத்திற்குப் தள்ளப்பட்டோம் அதிகாரப் பரவலாக்கல் மந்தகதியில் நடந்து வருகிறது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் தமிழ் மக்களின் உரிமைகளை அரசு மறுக்கிறது என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது'' (இ-எ)

## திருட்டு

மயிலணி, ஜூலை 8

சுன்னாகம் ப. நோ. கூ. சங்க இணுவில் கிளையில் பால்மா வகைகள், சோப் வகைகள், தீப்பெட்டி, சூடம் போன்ற பொருள்கள் திருடப்பட்டுள்ளன (இ 89)

## படுவான்கரை: விமான தாக்குதல்

கொழும்பு, ஜூலை8

மட்டக்களப்பு நகருக்கு மேற்கே வாவிக்கு அப்பால் உள்ள படுவான்கரைப் பிரதேசத்தின் காட்டுப் பகுதிகளில் பாதுகாப்புப் படையினரின் விமானத் தாக்குதல்கள் ஆரம்பமாகி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழன் பிற்பகல் இரண்டு மணியில் இருந்து விமானங்கள் தொடர்ச்சியான குண்டுத்தாக்குதல்களை மாலை 4 மணிவரைநடத்தின வாவியில் சில சடலங்கள் காணப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## சாம்பல்தீவு அகதிகள்

சாவகச்சேரி, ஜூலை 08

சாவகச்சேரிப் பகுதிக்கும் திருமலையைச் சேர்ந்த அகதிகள் பெருமளவில் வந்து சேர்கின்றனர்.

செவ்வாய்க்கிழமை சாம்பல் தீவைச் சேர்ந்த 80க்கும் அதிகமானோர்வந்து சேர்ந்தனர். மட்டுவில், நுணாவில் பகுதிகளில் இவர்கள் தங்கி உள்ளனர். (இ-31)

## 30 பேர் கைது

கொழும்பு, ஜூலை 8

பாண்டிருப்பு, மருதமுனை ஆகிய கிராமங்களில் ஆயுத படையினர் நடத்திய தேடுதலின் போது முப்பது பேர் கைது செய்யப்பட்டனர்.

# கொழும்பு பஸ்ஸுக்கு அறவிடப்படும் கட்டணம்!

யாழ்ப்பாணம், ஜூலை 8

நேற்று யாழ்.நகரிலிருந்தும் சாவகச்சேரி பகுதியிலிருந்தும் ஒரு சில பஸ்கள்கொழும்பு நோக்கிப் புறப்பட்டன.

பஸ்கட்டணமாக தலா 700 ரூபாவும், இடையில் இராணுவ முகாம்களுக்கு கொடுப்பதற்காக தலா 300 ரூபாவுமாக பயணிகளிடமிருந்து ஆயிரம் ரூபா வீதம் கட்டணமாக அறவிடப்பட்டதாகக் கூறப்பட்டது.

கேரதீவு, சங்குப்பிட்டி, மன்னார் வீதி, திருக்கேதீஸ்வரம், மடுறோட், செட்டிகுளம், யக்காவ ஆகிய பகுதிகள் ஊடாக இந்த பஸ்கள் பயணத்தை மேற்கொள்ளும் என்று சொல்லப்பட்டது.

# ஜம்மு - காஷ்மீர் மாநிலம் ஜனாதிபதி ஆட்சியின் கீழ்

புதுடில்லி, ஜூலை 8

ஜம்மு- காஷ்மீர் மாநில நிர்வாகம் இம் மாதம் 19 ஆம் திகதி முதல் ஜனாதிபதியின் நேரடி ஆட்சியின்கீழ்கொண்டு வரப்படவுள்ளது.

கடந்த ஜனவரி 19ஆம் திகதி மாநில முதலமைச்சர் பதவியில் இருந்து ஜனாப். பரூக் அப்துல்லா ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, ஆளுநர் ஆட்சியின் கீழ் இந்த மநிலம் கொண்டுவரப்பட்டது.

ஆளுநர் ஆட்சி இம்மாதம் 18ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இதனிடையில், காஷ்மீர் பள்ளத்தாக்கு பிரதேசத்தின் பாதுகாப்பை இந்திய இராணுவம் பொறுப்பேற்றுள்ளது. பாதுகாப்பை நிலைநாட்ட இராணுவத்துக்கு பூரண அதிகாரம வழங்கப்பட்டுள்ளது. (இ-எ)

# பேச்சு மூலமான தீர்வே நிரந்தரம் என்கிறார் மந்திரி

கொழும்பு, ஜூலை 8

இனப்பிரச்சினைக்குப்பேச்சுவார்த்தைகள் மூலம் காணப்படும் தீர்வே நிரந்தரமானது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் ஏ. எம். எஸ்.அதிகாரி மாத்தறையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் மேற்கண்டவாறுசொன்னார்.

யுத்தத்தின்மூலம் காணப்படும் தீர்வு தற்காலிகமானது என்றும் பேச்சுக்கள் மூலம் தீர்வு காணப்படுவதையே அரசு விரும்புகிறது என்றும் அமைச்சர் சொன்னார். [உ-எ]

# லால் டெங்கா காலமானார்

லண்டன், ஜூலை 8

மிஸோராம் மாநில முன்னாள் முதலமைச்சர் லால் டெங்கா லண்டனில் காலமானார்.

நியூயோர்க்கில் ஈரல் புற்று நோய்க்குச் சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று விமான மூலம் புதுடில்லிக்கு அழைத்து வரப்படுகையில் நடுவழியில் அவரது உடல் நிலை மோசமாகியது.

உடனே விமானம் லண்டனில் இறங்கியது. அங்கு அவருக்கு மரணம் சம்பவித்தது.

மிஸோராம் மாநிலம் உருவான போது அதன் முதலாவது முதலமைச்சராக திரு. லால் டெங்கா பதவி ஏற்றார்.

மிஸோராம் தேசிய விடுதலை முன்னணியின் ஸ்தாபக தலைவராக இவர் இருந்தார். [ஒ-எ]

# பீரங்கிக் குண்டுச் சத்தத்தினால் தலைகுப்புறகிணற்றில் வீழ்ந்தார்

மூன்று போர்க் கப்பல்களும் இரண்டு பீரங்கிப் படகுகளும் கடந்த புதன்கிழமை நண்பகல் 12.45 முதல் 2 மணி வரை தொடர்ச்சியாக கடற் பகுதியிலிருந்து வல்வெட்டித் துறையை நோக்கி பீரங்கிக் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

அப்போது பொம்மரும், ஹெலியும் வான் வெளியில் வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

இச்சம்பவத்தில் ஊரிக்காடு, கம்பர்மலை, கொம்மாந்தறை, கெருடாவில் ஆகிய இடங்களில் வீடுகள் சேதமடைந்தன. பொதுமக்கள் சிலரும் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தை அடுத்து இப்பகுதி மக்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றனர்.

பீரங்கிக் குண்டுத் தாக்குதல் சத்தங்களால் அதிர்ச்சியடைந்த, பொலிகண்டி, தம்பலடியைச் சேர்ந்த 70 வயது முதியவரான சிதம்பரப்பிள்ளை கந்தவனம் என்பவர் வீட்டுக்கு வெளியே சென்றிருந்தவேளை தடுமாறித் தலைகுப்புறக் கிணற்றுள் வீழ்ந்தார். தலையில் காயங்களுடன் இப்போது அவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ-160)

# ஈழத் தமிழருக்கு உதவிட தமிழக மக்களுக்கு அழைப்பு

சென்னை, ஜூலை 8

இலங்கையில் முன் எப்பொழுதும் இல்லாத அளவு நடைபெறும் இனப்படுகொலையை நிறுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண தமிழர்கள், கட்சி வேறுபாடின்றி ஈழமக்களுக்கு உதவ முன்வர வேண்டும் என்று திராவிடர் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது

சென்னையில் நேற்று நடைபெற்ற திராவிடர் கழகச் செயற்குழு கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# திட்டவட்டமான நடவடிக்கை இந்தியா எடுக்க வேண்டும்

## இரா. ஜனார்த்தனம் கோரிக்கை

இலங்கை நெருக்கடியில இந்தியா திட்டவட்டமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உலகத் தமிழர் சம்மேளனத்தலைவர் டாக்டர் இரா. ஜனார்த்தனம் இப்படிக் கேட்டுள்ளார்.

தவறினால் அது இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்தாக நேரிடும் என்றும் டாக்டர் ஜனார்த்தனம் எச்சரித்துள்ளர். (இ-எ)

## வட-கிழக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விதத்தில் இப்பிரகடனம் அமைந்திருந்தது.

மாகாணசபையின் கடமைகளிலும் பங்குகொள்ள இந்த உறுப்பினர்கள் மறுத்துஇருந்தனர்.

இந்த ஒரு நிலைப்பாட்டை வடக்கு- கிழக்கு மாகாண ஆளுநர் அறிவித்திருப்பதாகவும் ஜனாதிபதி பிரேமதாஸ தேர்தல் ஆணையாளருக்கு தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து வடக்கு - கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டுவிட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கிழக்குத்...

தடை செய்து வருகின்றது

உலக அமைப்புகள் தமிழீழ மக்களுக்கு வழங்கும் நிவாரண உதவிகள் ஏதும அவர்களுக்கு வந்து சேரவில்லை.

தென் பகுதியில் ஜே. வி. பியை அழிக்கிறோம் என்ற பெயரில சிங்கள அரசு பல்லாயிரக்கணக்கான சிங்கள மக்களைக் கொன்று குவித்ததை உலகம் அறியும்

இன்று விடுதலைப்புலிகளை அழிக்கிறோம என்ற பெயரில் தமிழர்களை கிழக்கு மாகாணத்தை விட்டே அழித்தொழிக்கும் நோக்குடன் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது சிங்கள அரசு

கிழக்குமாகாணத்தில் தமிழ் பேசும் மக்கள் எங்கு வழ்ந்தாலும் ஸ்ரீலங்கா படையினரால் கைது செய்யப்பட்டு வெட்டியும், சுட்டும் கொல்லப்படுகின்றனர் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீட்டின் நடுவே பாதுகாப்பு அறை அமையுங்கள்; கேணி, கிணறுகளையும் அகழிகளாக மாற்றலாம்

(முன் தொடர்ச்சி)

தொடர்ச்சியான குண்டு வீச்சுக்கள் நடைபெறும் காலங்களில், பல மணித்தியாலங்கள் வரை கூட வெளியே நடமாட முடியாத ஒரு நிலை ஏற்படும். அக்காலங்களில் உணவு, இருப்பிடம் நீர் வசதிகள் கூட ஒழுங்கற்று காணப்படும்.

இப்படியான சந்தர்ப்பங்களில் உங்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருள்கள் போன்றன ஓரிடத்தில் சேமிக்கப்பட்டிருப்பின். வீணான அலைச்சலையும், மனக்குழப்பத்தையும், பீதியையும் தவிர்த்துக்கொள்ள முடியும்.

### குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பது எப்படி? பகுதி III

எனவே இக் காரணங்களுக்காக உங்களது வீடுகளிலோ தொழிற்சாலைகளிலோ அன்றி கடைகளிலோ கூட ஒரு அறையொன்று இதற்காக ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும்.

**பாதுகாப்பு அறை**

இவ்வறையானது நிலத்தின் கீழ் அமைந்திருப்பின் அது மிகச் சிறந்த ஒரு பாதுகாப்பு வழியாகும் அவ்வகையான வசதிகள்இல்லாவிடின், யாதாயினும் ஒரு அறையொன்று ஆனால் அது வீட்டின் நடுப் பகுதியில் அமைந்திருக்கக் கூடியவாறு தேர்ந்தெடுக்கப் படவேண்டும்.

அத்துடன் எளிதில் தீப்பற்றக் கூடிய பொருள்கள் எதுவும் இல்லாதவாறும், அவ்வறைக்கு அருகில் எங்கும் தீ ஏற்படுத்தும் மூலகங்கள் இல்லாதவாறும் பார்த்துக்கொள்ளல் வேண்டும். அறையினுள் சென்று வரக்காணப்படும் சாதாரண வழியைவிட ஒரு அவசரகால வழி இருப்பதும் அவசியமானதாகும்.

10'x 10'x 8' அளவுகளைக் கொண்ட அறையானது 5நபர்களையும் 15' x 10' x 8' அளவுகளைக்கொண்ட அறையானது 7நபர்களையும், 20'x15' x 10' அளவுகளைக் கொண்ட அறையானது 13 நபர்களையும் தொடர்ச்சியாக 12 மணித்தியாலங்களுக்குதங்க வைக்கக் கூடியது மேற்குறிப்பிட்ட அளவுகள் மிகக்குறைந்த அவசியமானவையேயாகும். எனவே சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து அதிகளவு ஆட்களோ அன்றி அதிக நேரத்திற்கோ கூட இதனுள் தங்கவேண்டிவரும் எனவே அவ்வறையினுள் தங்கவேண்டி வரக்கூடிய நபர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அதனுள் சேமிக்கப்படும பொருள்களின் அளவும் திட்டமிடப்பட வேண்டும்.

பின்வரும் பொருள்கள் எந்நேரமும் அதனுள்ளே பாதுகாப்பாக, தயாராகயிருக்க வேண்டும்.

1. குடிதண்ணீர்,
2. உணவு (தகரங்களில் அடைக்கப்பட்டவை விருப்பத்தக்கது)
3. முதலுதவிப்பெட்டி,
4. உயிர்காப்புஉபகரணங்கள் (அலவாங்கு, [illegible], வெட்டி, கயிறு போன்றவை)
5. தியணைப்பு கருவி, நீர்,
6. எண்ணெய் விளக்கு, மெழுகுதிரி, டோச், தீப்பெட்டி,
7. பாட்டரியால் இயங்கும் ரேடியோ, புத்தகங்கள்,
   மல சல வசதி,
9. தளபாட, உடுப்புவசதி.

இப்பொருள்கள் நல்லநிலையில் உள்ளனவா என அடிக்கடி பரிசீலிக்கவேண்டும். இதனுள் இருக்கும் சமயங்களில் கண்டபடி கதைத்து, அலைந்து திரிவதால் அதிகளவு சக்தி இழப்பு ஏற்படும். எனவே ஓரிடத்தில் இருப்பதோ அன்றி படுப்பதோ தான் சிறந்ததாகும்.

### தகவல் மேடை

மேற்கூறப்பட்ட வகையிலான உறுதியான வீடுகளோ அல்லது அருகில் வேறு கட்டடங்களோ இடையாவிடின் உங்களது சூழலில் உள்ள அமைப்புக்கள் சிலவற்றைக் குண்டுவெடிப்பின் போது ஏற்படும் சிறு துண்டுகளுக்கெதிரான பாதுகாப்புள்ளதாக எவ்வகையில மாற்றலாம் எனக் கவனிப்போம்.

இதன்போது மரவாலைகள் முதலியவற்றில் மரம் அரிவதற்காக வெட்டப்பட்டிருக்கும் கிடங்குகள் பயன்படுத்தக்கூடியனவாகும். நீங்கள் பயன்படுத்துவதற்குத் தேவையான பகுதியை விட்டு ஏனைய பகுதியை சிலபலகைகளினாலோ, தகரங்களினலோ மூடி, குண்டுவீச்சு நிகழும் போது அதனுள் சென்றிருப்பது பாதுகாப்பானதாகும்.

**கேணிகள், கிணறுகள்**

உங்கள் சூழலில் உள்ள ஒரு சில கோயிற் கேணிகள் பாவிக்கப்படாத நிலையில் செடி, கொடிகள் வளர்ந்து கவனிப்பாரற்று இருக்குமாயின் அவற்றினைக்கூட நீங்கள் மேல் பகுதியை மூடிவிட்டு பயன்படுத்தலாம். அவ்வகையான கேணிகள் அகலம் கூடியவையாய் இருப்பின் இது சிறிது கடினமான செயலாகவே இருக்கும்பாதை. ஓரங்களில் நீர் வடிந்து செல்வதற்காக வெட்டப்பட்டிருக்கும் வடிகால்கள் போன்றவற்றைக் கூட சற்று ஆழமாக்கிக் குண்டு வீச்சுக்களிற்கு எதிரான அகழிகளாக மாற்றலாம். இவற்றைப்போல் தூர்ந்த கிணறுகள், மதகுகளின் கீழ்ப் பகுதிகள், பெரிய கான்கள் போன்றவற்றைக் கூட உங்களைக் குண்டு வீச்சுத் தாக்குதல்களில் இருந்து பெருமளவு பாதுகாக்கும்.

சில வேளைகளில் மேற்பகுதி மூடக்கூடிய வசதி இல்லாவிடில் அவ்வாறான கிடங்குகளை பாதுகாப்பற்றது எனக் கருதி ஒதுக்கிவிட வேண்டாம். அவைகள் நேரடியாகவோ அல்லது ஒரு சில அடிகள் அண்மையிலோ விழுந்து வெடிக்கும் குண்டுகளுக்கு மட்டுமே பாதுகாப்பற்றனவாகும். அவ்வகையான சந்தர்ப்பங்கள் மிக மிகக்குறைவானதாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடி கொடுப்பவரும்
பல் கட்டுபவரும்!



பி. ஐ. பர்னாண்டோ
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் முன்பாக)
யாழ்ப்பாணம்.

உதயன்

08 - 7 - 1990 ஞாயிற்றுக்கிழமை

பல் கட்டுபவரும்
கண்ணாடி தருபவரும்,



கிளை: பி. ஐ. பர்னாண்டோ
292, (540) ஆஸ்பத்திரி வீதி,
(போதனா வைத்தியசாலை முன்பாக)
யாழ்ப்பாணம்.

# ஈழ தமிழரை பாதுகாக்கும் உரிமை; இந்தியா நிலைநாட்ட வேண்டும்

## வி.பி. சிங்கிடம் வாழப்பாடி இராமமூர்த்தி வலியுறுத்து

சென்னை, ஜூலை 8

இந்திய - இலங்கை உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கைத் தமிழரைப் பாதுகாக்க இந்தியாவுக்குள்ள உரிமையை பிரதமர் வி. பி. சிங் நிலைநாட்டவேண்டும்.

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி மேற்கண்டவாறு வலியுறுத்தி உள்ளார்.

சென்னையில் செய்தியாளர் மாநாடு ஒன்றில் திரு. இராமமூர்த்தி இதனை வெளியிட்டார்.

இலங்கைநெருக்கடியில் நடவடிக்கை எடுக்காது வெறும் பார்வையாளராக முதலமைச்சர் கருணாநிதி நடந்து கொள்வதாக திரு. இராமமூர்த்தி குற்றஞ் சாட்டினார்.

வெளியுறவு அமைச்சர் குஜ்ரால், இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிடாது என்று கூறியதையும் திரு. இராமமூர்த்தி கண்டித்தார்.

இலங்கைத் தமிழர் உயிர்களையும் உடமைகளையும் பாதுகாக்கும் பொறுப்பு இந்தியாவுக்கு இலங்கை - இந்தியா உடன்படிக்கை மூலம் வழங்கப்பட்டிருப்பதாகவும் திரு. இராமமூர்த்தி சுட்டிக்காட்டினார்.

திரு. இராமமூர்த்திமேலும் சொன்னதாவது;-

இலங்கை விவகாரம் சம்பந்தமாக மத்திய அரசுமீது தி. மு. க. மாநில அரசு தனது செல்வாக்கைப் பிரயோகிக்கவேண்டும்.

இயலாதபட்சத்தில் மத்திய அரசுக்கு ஆதரவளிப்பதை தி. மு. க. விலக்கிக்கொள்ள வேண்டும்.

இலங்கைத் தமிழர் கொல்லப்பட்டுவரும் சமயத்தில் முன்னாள் இலங்கை மன்னன் ஸ்ரீராஜசிங்கனுக்கு முத்துமண்டபம் அமைத்து, விழாஎடுப்பதில் திரு. கருணாநிதி ஈடுபட்டிருப்பது வேதனைதருகிறது.

இலங்கை - இந்திய உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு அதன்படி செயல்படுவதா? அல்லது வேறுஒரு புதிய ஏற்பாட்டைச் செய்து கொள்வதா? - என்பதை இந்திய மத்திய அரசு தெளிவுபடுத்தவேண்டும்.

ஏனெனில் தமிழர் படுகொலை செய்யப்படுவதை வேறு எந்த வழியாலும் தடுத்து நிறுத்தமுடியாது.

### வெளியுறவுக் கொள்கை தோல்வி

இலங்கைச் சம்பவங்கள் இந்திய வெளியுறவுக் கொள்கையின் தோல்வியையே சுட்டிக்காட்டுகிறது.

இலங்கை அரசு தமிழரைக் காப்பாற்றுவதாக இல்லை. காப்பாற்றும் பொறுப்பை ஏற்ற இந்தியா அதனைத்தட்டிக்கழிக்கும் முறையில் நடந்துவருகிறது.

இப்படி வாழப்பாடி இராமமூர்த்தி சொன்னார். (இ-எ)

## வ. பி. போ. ச. ஊழியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 8

வடபிராந்திய போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த சகல நிரந்தர உத்தியோகத்தர்களையும், ஊழியர்களையும், நாளை திங்கட்கிழமை காலை தாம் வேலை செய்த சாலைகளில் சமுகம் அளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

வ.பி.போ.சபைத் தலைவர் திரு. சி. கனகரத்தினம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். (ஒ)

## சென். ஜோன்ஸ் இன்டரக்ட் உறுப்பினருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 8

சென். ஜோன்ஸ் கல்லூரி இன்டரக்ட் கழக உறுப்பினர்களை இன்று காலை 9மணிக்கு கல்லூரியில் அதிபரையும் பொறுப்பாசிரியர் திரு. மயில்வாகனத்தையும் சந்திக்கும்படி கேட்கப்பட்டிருக்கிறது.

அகதிகள் நிவாரணப் பணி தொடர்பான நடவடிக்கைகளை ஆராய்வதற்காக இவர்கள் அழைக்கப்பட்டிருக்கின்றனர். (உ)

## விலை வீழ்ச்சி

கொழும்புத்துறை ஜூலை 8

முந்திரிகை, வாழைப்பழம் ஆகியவற்றின் விலைகள் குறைந்து வருகின்றன வெங்காய விலையும் கிலோ 20 ரூபாவாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

## முல்லைத்தீவு அகதிகளுக்கு செஞ்சிலுவை பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 8

முல்லைத்தீவுமாவட்டத்தில் தங்கியுள்ள அகதிகளுக்கு உடுபுடவைகளையும் அத்தியாவசிய மருந்து வகைகளையும் எடுத்துக்கொண்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழு, யாழ். செஞ்சிலுவைச்சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இன்று முல்லைத்தீவு செல்கிறார்கள்.

அவர்கள் தம்முடன் குழந்தைகளுக்குத் தேவையான ஜீவாகாரம் 500 பைக்கற்றுளில் எடுத்துச் செல்கின்றனர். அங்கு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள நிவாரணமற்றும் மருத்துவப்பணிகளை மேலும் விஸ்தரிக்கும் நடவடிக்கைகளை இக்குழுவினர் மேற்கொள்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

## செயலக ஊழியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 8

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தற்காலிகமாக தமது கடமைகளைச் செய்து வரும் யாழ். செயலக ஊழியர்கள் அனைவரையும் திங்கட்கிழமை காலை 10மணிக்கு யாழ். செயலகத்துக்கு சமுகம் கொடுக்குமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

யாழ். செயலகத்தில் உள்ள அனைத்துப் பிரிவுகளையும் மீண்டும் இயங்கச்செய்வது குறித்து ஆராயும்பொருட்டே சகல ஊழியர்களுக்கும் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (உ-10)

## பதுங்குகுழி அமைக்கும் சமூகப்பணி தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஜூன் 8

திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவரும், மாணவிகளும் இணைந்து நேற்று கொக்குவில் சந்தைக்குச் சமீபமாக பெரிய பதுங்குகுழி ஒன்றை அமைத்தனர்.

அப்பகுதி மக்கள் அவர்களுக்கு உணவு, தேநீர் மற்றும் குளிர்பானங்களை வழங்கி உற்சாகம் ஊட்டினர்.

நேற்று அரியாலைப் பகுதி மாணவிகள் இரண்டாவது பதுங்குகுழியை தபால்கட்டைச் சந்தியிலுள்ள சந்தைப்பகுதியில் அமைத்தனர்.

உருப்பராய்ப்பகுதி மாணவிகளும் மாவீரன் சிவகுமாரன் நினைவுத்தூபிக்கு முன்பாக பெரியபதுங்குகுழியை அமைத்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவ மாணவியரின் இச் சமூகப்பணிக்கு பொதுமக்கள் பலரும் பலவழிகளிலும் ஒத்தாசை வழங்கிவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## முகாம் சுற்றிவளைப்பு?

யாழ்ப்பாணம், ஜூலை 8

அம்பாறை மாவட்டத்தில் அடர்ந்த காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் முக்கிய முகாம் ஒன்றை ஸ்ரீலங்கா படையினர் சுற்றி வளைத்துள்ளதாக இலங்கை அரசு அறிவித்தது இவ்வாறுபி.பி.ஸி நேற்றிரவு தெரிவித்தது.

இது, விடுதலைப் புலிகளின் முக்கியபயிற்சி முகாம் என்றும், பல சுரங்கங்களும், பதுங்குகுழிகளும் நிறைந்து உள்ளதாகவும் சுமார் நூறு போராளிகள் இங்கிருப்பதாகத் கருதப்படுவதாகவும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-9)

## மருந்துடன் வருவார்களாம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

மருந்து வகைகள் மற்றும் வானொலித்தொடர்புசாதனங்கள் சகிதம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவைச் சேர்ந்த அதிகாரிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை பலாலிக்கு வந்த பிராஸ்தாப அதிகாரிகள் குழுவை வரவேற்கச் சென்ற பிரதிநிதி மீது, ஸ்ரீலங்கா இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைத் தொடர்ந்து அதிகாரிகள் கொழும்பு திரும்பிச் சென்றனர்.

அதே அதிகாரிகள் குழுவினர் மீண்டும் தரை மார்க்கமாக இன்று யாழ்ப்பாணம் வந்து சேருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை சூட்டுக்கு இலக்காகிய செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் வாகனம் இன்னமும் மீட்கப்படாமல், சம்பவம் நடந்த பலாலி இராணுவ முகாமின் முன்பாக நிற்கிறது. [அ-9]

# மரண அறிவித்தல்கள்

## நாகப்பர் வேலுப்பிள்ளை

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழையை வதிவிடமாகவும் கொண்ட நாகப்பர் வேலுப்பிள்ளை அவர்கள் 07-07-1990 இல் காலமாகி விட்டார். அன்னார் காலம் சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், ஆறுமுகம் [இலங்கை வங்கி திருகோணமலை], செல்வரத்தினம் (Director I. D. P, யாழ்ப்பாணம்), காலம் சென்ற யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தனலட்சுமி (ஆசிரியை பண்டத்தரிப்பு, மகளிர் கல்லூரி), நிர்மலாதேவி ஆகியோரின் மாமனாரும், சிறோனி, சுரேஷ், சபேஷ், ரமேஷ், சுரேஷ், ஜமுனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று 08-07-1990 ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழையில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
—பிள்ளைகள்

A. G. A's Office Lane,
Tellippalai.

[13592]

## ராஜா ஸ்ரீபிரபாகரன்

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் வசித்தவரும் தற்பொழுது சங்கானை ஆஸ்பத்திரி வீதியில் வசித்து வருபவருமான ராஜா ஸ்ரீ பிரபாகரன் 7ஆம் திகதி காலமானார். இவர் காலஞ்சென்ற ராஜாவினதும், நாகபூசணியின் அன்பு மகனும் சத்தியகுமாரியின் அன்புக்கணவரும் (ஆசிரியை நிற்சாமம் விக்னேஸ்வர வித்தியாசாலை), ஸ்ரீ கார்த்திக்கின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சிவசிதம்பரத்தினதும் நாகேஸ்வரியின் அன்பு மருமகனும், சத்தியபாமா (அமெரிக்கா), சத்தியமூர்த்தி, சத்தியதேவி, சத்தியவதனி, மேரி (பாரிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் சங்கானை மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
சி. சத்தியமூர்த்தி.

சங்கானை கிழக்கு,
சங்கானை.

(13594)

## பிரம்மஸ்ரீ பொ. கனகசபாபதி ஐயர்

பிரம்ம ஸ்ரீ பொ. கனகசபாபதி ஐயர் நேற்று 7-7-90 அன்று வட்டுக்கோட்டையில் காலமானார். இவர் தும்பளையைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னுஸ்வாமிக் குருக்களின் மகனும், வண்ணார்பண்ணை சிவலிங்கப் புளியடி காலஞ்சென்ற பஞ்சநதேஸ்வரக் குருக்களின் மருமகனும், யாழ். ஆனந்தா அச்சகத்தில் கடமையாற்றியவரும், யாழ்ப்பாணம் பிரப்பங்குளம் வீதி, 28ஆம் இலக்க இல்லத் தலைவருமாவார்.

அன்னார் தேவமணியின் அன்புக் கணவரும், யசோதரன் (Accounting System & Service Ltd.) லதாமதி (வவுனியா விவசாயக் கல்லூரி), சுரேந்திரன் (ஜெகா போட்டோஸ்), கிரிதரன், யாழரசன் ஆகியோரின் தந்தையாரும், சாந்தா (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி) வின் மாமனாரும், சுதர்சனனின் அன்புப் பாட்டனாருமாவார்.

தகனக் கிரியைகள் நேற்று வட்டுக்கோட்டையில் நடைபெற்றன. உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

மனைவி, பிள்ளைகள், மருமகள்

''கோகுலம்'',
அடைக்கலம் தோட்டம்,
கந்தசாமி கோவில் ஒழுங்கை,
வட்டுக்கோட்டை.

(13499)

# நாமும் தம்மிடம் ஏமாறவில்லை என்று புலம்புகிறார்கள் சிங்களத் தலைவர்கள்

## கொக்குவில் கூட்டத்தில் யோகி

கொக்குவில், ஜூலை 8

கடந்த நாற்பது வருடகால அரசியல் வரலாற்றில் தமிழ்த் தலைவர்கள் தான்ஏமாற்றப்பட்டனர்.

இப்போது தான் முதற் தடவையாக தமிழர்- விடுதலைப்புலிகள் - தம்மை ஏமாற்றி விட்டதாக சிங்களத் தலைவர்கள் புலம்புகிறார்கள்.

நாம் அவர்களை ஏமாற்றவில்லை நாமும் தம்மிடம் ஏமாறவில்லை என்று அழுகிறார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரத்திணம் யோகி.

கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தில் நேற்றுக்காலை தமிழீழ மீட்பு நிதி பற்றிய விளக்கவுரை கூட்டம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு பேசுகையிலேயே திரு. யோகி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:—

கடந்த 40 வருட வரலாற்றில் சிங்கள அரசுகளுடன் பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. பின் அவை கிழித்து வீசப்பட்டனஒவ்வொருமுறையும் தாம் ஏமாற்றப்பட்டதாக தமிழ்த் தலைவர்கள் புலம்பினர்.

இப்பொழுதுதான் முதற் தடவையாக தமிழர் தம்மை ஏமாற்றி விட்டதாக - புலிகள் தம்மை ஏமாற்றி விட்டதாக - சிங்களத் தலைவர்கள் கதறுகின்றனர்.

நாம் அவர்களை ஏமாற்றவில்லை. தம்மிடம் நாம் ஏமாறவில்லை என்ற அங்கலாய்ப்பு அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. அதாவது நாமும் தம்மிடம் ஏமாறவில்லை என்று அழுகிறார்கள்.

எமக்கு நாடாளுமன்றவசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால் எமது போராட்ட உணர்வு மழுங்கடிக்கப்பட்டுவிடும் என அரசு எண்ணுகிறது. அது அவர்களின் தப்புக் கணக்கு.

### வெளி மாவட்ட போராளிகள்

யாழ். மாவட்டத்தில் எட்டு லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். இங்கிருந்தே போராளிகள் ஏனைய தமிழ் மாவட்டங்களைக் காக்க வேண்டும்; ஆனால் ஏனைய மாவட்டங்களில் தம் உறவினர் அழிக்கப்படும் போதும், சகோதரிகள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்படும் பொழுதும், பலாலி முகாமிலும், கோட்டை முகாமிலும் எதிர்த்துப் போராடி இப்பிரதேசத்தைக் காப்பாற்றுபவர்கள் பிற மாவட்டத்தைச் சேர்ந்த போராளிகளாகவே உள்ளனர்.

பெண் போராளி ஒருத்தி தனியாக நின்று கடற்கரைப் பாதுகாப்பில் ஈடுபட, பல இளைஞர்கள் வேறொரு இடத்தில் கூடி நின்று அரட்டை அடித்துக்கொண்டும்கும்மாளம்இருக்கின்றனர்.

நாட்டில் என்ன நடக்கிறது என்றஉணர்வு அற்றவர்களாக எமது மக்கள் இன்னமும் உள்ளனர்.

களத்தில் நின்று போராடுவதுடன் எமது கடமை முடிந்துவிடவில்லை. அரசு நிர்வாகம் இல்லாத இடத்தில் அவற்றையும் கவனிக்கிறோம். மக்களின் தேவைகளை முழுமையாக இல்லாவிடினும் ஓரளவேனும் நிறைவேற்றவேண்டிய பொறுப்புக்கள் உண்டு. அகதிகளுக்கும் நாம் உதவுகிறோம்.

போராட்டம் கூர்மை அடைய நெருக்கடிகளும் அதிகரிக்கும். அவற்றினைக் கண்டு துவண்டுவிடக்கூடாது.

## யாழ். மாவட்டத்தில் தற்போதைக்கு புதிதாக அகதி முகாம் திறப்பதில்லை

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போதைக்கு அகதி முகாம் எதுவும் புதிதாக திறக்கப்பட மாட்டாது. தேவை ஏற்படும்பட்சத்தில் இதுவரை தொடங்கப்பட்டு, இயங்கி வரும் முகாம்களிலேயே அகதிகள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

இத்தகவலை யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இதுவரை 331 அகதி முகாம்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், நேற்று எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம் 56ஆயிரத்து 974 குடும்பங்கள் அந்த முகாம்களில் தங்கி உள்ளதாகவும் அரச அதிபர் சொன்னார். இவர்களில் 8ஆயிரத்து 692 குடும்பத்தினர் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். (அ-10)

## மட்டக்களப்பு அகதிகளை ரயில் மூலம் அனுப்ப முயற்சி

கொழும்பு ஜூலை, 8

மட்டக்களப்புக்குத் திரும்ப முடியாமல் கொழும்பில் இன்னமும் தங்கியுள்ள அகதிகளை பாதுகாப்பாக ரயில் மூலம் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமான உறுதிமொழியை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் சரித்த ரத்வத்தை, மட்டக்களப்பு மாவட்ட எம். பி. [illegible] தெரிவித்தார்.

[illegible] வரை ரயிலிலும், அதற்கு அப்பால் பஸ்களிலும் இவர்கள் மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## தொண்டமான் தலையிட வேண்டுமாம்

கொழும்பு, ஜூலை 8

வடக்கு-கிழக்கு யுத்தத்துக்கு முற்றுப்புள்ளிவைக்க அமைச்சர் தொண்டமான் தலையிட்டு வழிகாணவேண்டும்.

[illegible] ஹட்டன் மாநில இ. தொ. கா. அரசியல் மாநாடு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. (இ-எ)

## செஞ்சிலுவை சங்கங்களுக்கு வாகன வசதி இல்லை

முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார்,ஆகிய நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த செஞ்சிலுவைச் சங்கங்களுக்கும் வாகன வசதி ஏதும் இல்லை.

இதனால்அந்தந்தமாவட்ட செஞ்சிலுவைச் சங்கங்கள் தத்தம் பகுதிகளில் நிவாரணப் பணிகளைமேற்கொள்ள முடியாது அவதிப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## மருத்துவக் குழு விரைவு

யாழ்ப்பாணம், ஜூலை 8

வடமராட்சி கிழக்கில் தஞ்சம் புகுந்திருக்கும் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரம் குடும்பங்களுக்கு மருத்துவ வசதி ஏற்படுத்திக் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மூன்று டாகடர்கள் உட்பட மருத்துவ ஊழியர்களைக் கொண்ட குழு ஒன்றை ரூட் நிறுவனம் அங்கு அனுப்பி வைத்திருக்கிறது.

இந்த மருத்துவக் குழுவினருக்குத் தேவையான மருந்துப் பொருள்களை யாழ். சுகாதார சேவை அத்தியட்சகர் வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## பல்கலைக்கழக மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்.பல்கலைக்கழக மாணவருக்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் நிர்வாக அங்கத்தவர்களுக்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 9மணிக்கு நடைபெறும். (ஒ-10)

## யாழ். வாசி - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் அறியவருகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கோ, கொழும்பிலிருந்துயாழ்ப்பாணத்துக்கோ ஆட்களையோ, பொருள்களையோ ஏற்றிச் செல்லத் தாம் அனுமதிக்கப்போவதில்லை என்று அவர்கள் தெரிவித்தனராம். (அ)

## டயர் போட்டு - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் அனைத்தையும் கிண்ணியாவில் இருந்து வந்த முஸ்லிம் காடையர்கள் சிலர் கொள்ளையடித்ததாகவும் —

தம்பலகமம் 96, 98, 99 ஆம் கட்டைகளில் கிராமப் புறங்களில் உள்ள தமிழ் மக்கள் கிண்ணியாவில் உள்ள கடைகளுக்கு பொருள் வாங்கப் போகவிடாது முஸ்லிம் ஊர்காவல் படையினரால் துன்புறுத்தப்பட்டும்,கொலை செய்யப்பட்டும் வருகின்றனர் என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன; [உ-9]

## உற்பத்திக் குழுக்கள்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையங்கள் மட்டத்தில் ஏற்பாடு செய்த கருத்தரங்கு நேற்று யாழ். நகரில் நடைபெற்றது.

தற்போதைய சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு உடனடியாக வீட்டுத் தோட்டங்களை ஆரம்பிக்கும்படியும் வெற்று நிலங்களைப் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தும்படியும் கூட்டத்தில் கோரப்பட்டது. (உ)

## கிளிநொச்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிவிக்கப்பட்டது.

குண்டு வீச்சினால் வீடுகள் பல சேதமுற்றன என்றும் ஒரு பெண் காயமுற்றார் என்றும் நேற்று நண்பகல் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன;

மேலதிக விவரங்கள் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை. (ஒ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 08-07-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org